பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 12 வெள்ளிக்கிழமை 27.12.2024 கதிர் 050

## இரவுக் கடமைப் பொலிஸாரையும் விதிமுறையை பேண அறிவுறுத்து

### பதில் பொலிஸ் மா அதிபர் வழங்கினார்

இரவு நேரங்களில் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் உரிய விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளார். மேலும் இரவு நேரக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்து கண்காணிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் அறிவுறுத்தியுள்ளதாவது:

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காக பல வகை மின்விளக்குகளைப் பயன்படுத்தி வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை வழங்குகின்றனர்.

இதன்போது மின் விளக்குகளின் வெளிச்சம் வாகன சாரதிகளின் முகத்தில் நேரடியாகப்படுவதால், சில சமயங்களில் சாரதிகளுக்கு வாகனத்தை கையாள்வதிலும் கட்டுப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் விபத்து ஏற்படவும் வாய்ப்புகளும் உருவாகின்றன.

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் ஒளி பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் அணியாதிருப்பதால் விபத்துகள் சம்பாதிப்பதற்கும் அதிக வாய்ப்புள்ளது. ஆகையால் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் இதற்கு முன்னர் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காக சமிக்ஞை காட்டும்போது அவதானத்துடன் செயற்படுவது அவசியம். ☞ 2

## சபைமுதல்வர் பிமலும் பதவி விலகவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலிறுத்து

நீதி அமைச்சரின் பெயருக்கு முன்னாள் இடப்பட்ட கலாநிதி பட்டத்துக்கு தற்போது என்ன ஆனது? சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் அலுவலகத்திலிருந்தே இந்தத் தகவல்கள் சபாநாயகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே போலியான தகவல்களை வழங்கியமைக்காக சபைமுதல்வரும் பதவி விலகவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார். போலியாக கலாநிதிப் ☞ 8

### அலையில் அடித்துச் செல்லப்பட்டு

## ஹிக்கடுவைக் கடலில் இந்திய சுற்றுலாவி சாவு

ஹிக்கடுவ கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த நிலையில் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு இந்தியர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்ட மேலும் ஒரு இந்தியப் பெண்ணும் நான்கு ரஷ்யர்களும் நீரில் மூழ்கிய நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பொதுத்தேர்தலின்பின்பாகச்சேடம் இழுத்துக்கொண்டிருக்கும்ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியின் உயிர் வாயுக் கருவி ஞாயிற்றுக்கிழமை பிடுங்கப்பட்டு அதற்கு இறுதிக் கிரியைகள் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்தக் கூட்டணியின் தலைமைக்குழுக்கூட்டத்தை நாளை சனிக்கிழமை வவுனியாவில் கூட்ட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ☞ 2

## ஹபரணைக் காட்டுப் பாதையில் வாகனத்துடன் எரிக்கப்பட்ட நபர்

ஹபரணையில் காட்டுக்கு நடுவில் வீதியோரம் எரிந்து கொண்டிருந்த 'கெப்' ரக வண்டியில் இருந்து ஆண் ஒருவரின் சடலத்தைத் தாம் மீட்டுள்ளனர் என்று மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை மற்றும் பொலன்னறுவை பிரதான வீதிக்கு இடையில் உள்ள 38ஆவது கிலோ மீற்றருக்கான தூணுக்கு ☞ 2

## கொள்ளுப்பிட்டியில் நேற்று விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

இன்று(26)பிற்பகல்கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - தனியார் பேருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர் தெஹிவளை பகுதியைச் சேர்ந்த அப்துல் ☞ 2

# போதை வியாபார தொடர்புடைய அரசியல்வாதிகளும் இனிக் கைது

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் காட்டம்

பாதாளக்குழுவினர் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகளிடம் சம்பளம் பெறும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடனேயே சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. போதை வியாபாரத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் தனியார் தொலக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள நடவடிக்கை மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தின் கீழ் சம்பளம் பெறும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர். இவர்களின் பாதுகாப்புடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதன் பிரகாரமே கடந்த ☞ 2

## மன்மோகன் சிங் நேற்று மறைந்தார்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், புதுடெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் மறைந்தார்.

இறக்கும் போது அவருக்கு வயது 92. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் 1932இல் பிறந்தார்.

நன்கு அறியப்பட்ட ☞ 2

## நாணய நிதிய ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்தது உண்மை எனில் நிரூபியுங்கள்

### அஜித் பி.பெரேரா எம்.பி. வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டது உண்மையானால் அந்த மாற்றங்களை ஆளும்தரப்பால் பகிரங்கப்படுத்துங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா கேள்வி வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே முன்னைய ஆட்சியாளர்களால் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அப்பால் தற்போதைய ஆளும்தரப்பு எட்டிய இணக்கங்கள் என்ன? அவற்றை ஆளும்தரப்பால் கூறமுடியாது. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆளும்தரப்பால் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த ஆளும்தரப்பு பாடுபடுகின்றது.

நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டை மாற்ற வேண்டியிருந்தது. ஆனால் அதற்கான நேரம் போதவில்லை. மீண்டும் பின்னோக்கிச் செல்ல முடியாது. எனவே அதே பாதையில் செல்கின்றோம் என நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட எந்தவொரு விடயத்தையும் இந்த ஆளும்தரப்பால் நிறைவேற்ற முடியவில்லை.

ஒருபுறத்தில் கடந்த ஆளும்தரப்பின் வேலைத்திட்டங்களை மாற்ற முடியாது என ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்க, அவரது சகாக்கள் மறுபுறத்தில், நாம் மாற்றங்களை செய்து கொண்டிருக்கின்றோம் எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். அது உண்மை என்றால் அதனை ஆதாரத்துடன் நிரூபியுங்கள்.

அரிசிப் பிரச்சினைக்கு 10 நாட்களுக்குள் தீர்வினை வழங்குவதாக ஆளும்தரப்புக் குறிப்பிட்டது. அரிசி ஆலை மாபியாக்களுக்குப் பாடம் ☞ 2

## ஒவ்வொரு கிராமம் அருகிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்

### வைத்தியசாலை நெருக்கடிகளை குறைக்க திட்டம்

வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் உள்ள நெரிசலை நீக்கும் முகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் அருகில் ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறுவ ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும்

வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார நிறுவனங்களின் தலைவர்களின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ☞ 8

## சர்வதேச கடன் மறுசீரமைப்பில் ஒரு சதவீதப் பணி எஞ்சியுள்ளது

### தொழில் அமைச்சர் தெரிவிப்பு

சர்வதேச கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் கடந்த ஆளும்தரப்பே 99 சதவீத இணக்கப்பாட்டையும் எட்டிவிட்ட நிலையில் மிகுதி ஒரு சதவீதமான பணிகளையே முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இந்தியாவிலிருந்து நாடு திரும்ப வேண்டியிருப்பதால் ஞாயிற்றுக் கிழமை கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. வவுனியா, கோயில்குளத்தில்உள்ளஆனந்திஹோட்டலில் கூட்டம் நடக்க இருக்கின்றது.

கூ-ட்டணியின் இறுதிக் கூட்டமாக இதுவே இருக்கும் என்று பெரியளவில் எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தலுக்குப் பின்னர்கூட்டணியின்தலைமைக்குழுமுதல் தடவையாகக் கூடுகின்றமையால் தேர்தல் படுதோல்விக்கான காரணம் தொடர்பில் விவாதிக்கும்போது கடும் முரண்பாடுகள் தோன்றும் என்று கூறப்படுகின்றது. தேர்தல் தோல்விக்கு தமிழ் தேசியக் கட்சி, ஈபிஆர்எல்எவ், ஜனநாயகப் போராளிக் கட்சிகளின் பலவீனமும் மக்கள் ஆதரவற்ற தன்மையும்தான் காரணம் என்று ஒரு தரப்பினரும் ரணிலுடனான பின் கதவு அரசியலும் புலம்பெயர் தமிழ் முதலாளியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட அரசியல் 'டீல்'களும்தான் காரணம் என்று ஒரு பகுதியினரும் குற்றச்சாட்டுக்களுடன்தயாராகஇருக்கின்றனர்.

இந்தக் கூட்டணிக்குள் சிறீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சி மற்றும் ஈபிஆர்எல்எவ் ஆகியவற்றை எப்படியும் அடக்கி ஒடுக்கவேண்டும் முடியாவிட்டால் வெளியேற்றவேண்டும் என்று ரெலோ தரப்பில் தீவிரம் காட்டப்படுகின்றது. ரெலோவின் பின்கதவு அரசியல்தான் தோல்விக்குக் காரணம் என்பதால் இப்போது இருக்கும் தலைமையின் கீழ் இனிமேலும் ரெலோவுடன் சேர்ந்திருந்து அரசியல் செய்ய முடியாது என்று தூக்கி எறிகின்ற நிலையில் தமிழ் தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது.

கூட்டணிக்குள்இந்தமூன்றுகட்சிகளையும் பலவீனப்படுத்திக்கொண்டு, ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் மணிவண்ணன் தரப்புக்களை உள்ளே கொண்டு வருவதற்கு ரெலோ எடுத்த முயற்சிகளும் வெற்றிகரமாக அமையவில்லை. ரெலோவின் செயலாளர் ஜனா, பொருளாளர்சுரேன்குருசாமிஆகியோர் இருக்கும் கூட்டணிக்குள் சேர்வதற்கு இந்த இரு தரப்புக்களும் தயக்கம் காட்டுகின்றன.

இதற்கிடையில் இனிவரும் தேர்தல்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் 'சங்கு'சின்னத்தில்தேர்தல்கேட்பதில்லைஎன்று புளொட் மற்றும் ரெலோவின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அதிலும் குறிப்பாக உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் என்பவற்றில் வெற்றி பெற்ற இந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து கேட்பது அல்லது தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்குவது என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

அத்தோடு, அடுத்தடுத்த தேர்தல்களை தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து கேட்பது அல்லது ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி என்ற தமது அரசியல் கட்சியின் வெளிச்சவீட்டுச் சின்னத்தில் தேர்தல் கேட்பது என்கிற முடிவுக்கு புளொட் தலைமைக் குழுவும் வந்துள்ளது. தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று கட்சியின் தலைமையிலிருந்து விலக சித்தார்த்தன் ஏற்கனவே தயாராக இருக்கின்றார். இருந்தாலும் கட்சிக்குள் தலைமையைப் பொறுப்பேற்கக்கூடியவர்கள் இப்போதைக்கு இல்லாத காரணத்தால் சித்தரையே தலைமையில் தொடரும்படி அவர்கள் கேட்கினிறார்கள்.

தான் தலைமையில் தொடர்ந்தாலும் இனிவரும் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பானமுடிவுகளைஎடுக்கும்சுதந்திரத்தை அடுத்த மட்டத் தலைவர்களிடம் சித்தர் விட்டுவிட்டார். அவர்கள் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட விரும்பினால் தான் அது பற்றி அந்தக் கட்சியுடன் பேசுவார் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ரெலோவும் ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து போகும் முடிவை தலைமைக் குழுவில் எடுத்துள்ளது. ஆக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருந்து இந்த இரு கட்சிகளும் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்க முடியுமா என்று பார்க்கின்றன. இனி தமிழ் அரசுக் கட்சிதான் இது குறித்து முடிவு செய்யவேண்டும் என்பதாலேயே கூட்டணியை முறித்துக்கொள்வது குறித்து இவர்களிடம் இருந்து பகிரங்க அறிவிப்பு எதுவும் இதுவரை வரவில்லை.

இப்படிஇந்தஇருகட்சிகளும்கூட்டணிக்குத் துரோகம்செய்யத்தயாராகிவிட்டதால்எஞ்சிய மூன்றுகட்சிகளும்ஜனநாயகத்தமிழ்அரசும் மணிவண்ணன்தரப்பும்இணைவதற்கான முயற்சிகள் நகர்வுகள் இடம்பெறுகின்றன. இருந்தாலும் இந்தக் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு கிடைக்குமான என்கிற சந்தேகம் காரணமாக அந்த நகர்வுகளில் வேகம் இல்லை என்று தெரிகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகூட்டத்திற்குப்பின்னர் இவை தொடர்பில் ஒரு தெளிவான விம்பம் உருவாகக்கூடும்.

**.இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போதை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம்பேலியகொடைமீன்சந்தைக்குசென்று, அந்த வியாபாரிகளுடன் கலந்துரையாடி அவர்களுக்குச் சில ஆலோசனைகளை வழங்கியிருந்தேன்.

சில கிராமங்களில் ஒட்டுமொத்த பொலிஸ் நிலையமும் போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான்

ருவன்வெல்லவில் உள்ள முழு பொலிஸ் படையையும் நாங்கள் இடமாற்ற வேண்டியிருந்தது. புலனாய்வுத்தகவல்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தினை எடுக்க வேண்டியிருந்தது.

அது மட்டுமல்ல, அவிசாவளையிலும் ஒரு குழு உள்ளது, அவர்கள்ஒருவலையமைப்பின் ஊடாகச் சேர்ந்துள்ளனர். அதனால் நாங்கள் இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரை அழைத்துக் கலந்துரையாடினோம்.

பாதாள கோஷ்டி தலைவர் மத்துகமவில் இருக்கிறார்.

இதை ஒரு பிரச்சினையாகவே பார்க்கிறோம். பாதாளக் குழுக்களையும் போதைப்பொருள் கடத்தலையும் இல்லாதொழிக்க எடுக்கப்பட்ட சில

நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு முன் வெளிப்படுத்த முடியாது.

அத்துடன்கொழும்புக்குள்போதைப்பொருள் விநியோக்கும்மத்தியநிலையங்களில்ஒன்றாக பேலியகொடை மீன் விற்பனை நிலையம் இருந்து வருகிகிறது. அங்கு தற்போது மீன் வியாபாரம் குறைந்து போதைப்பொருள் வியாபாரமேதலைதூக்கிஇருக்கிறது. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

பல்வேறு பகுதிகளில் இருந்து மீன் கழிவுகளைகொண்டுவந்துஉரம்அமைப்பதாக

தெரிவித்து ஒரு வேலைத்திட்டம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் மீன் கழிவுகளைகொண்டுவரும்அந்தபெட்டிகளில் போதைப்பொருளேஇருப்பதாகஎமக்குத்தகவல் கிடைத்தது. மீன் கழிவுகளை பரிசோதித்து பார்ப்பதற்கு யாருக்கும் விருப்பம் இல்லை. அதனால் பொலிஸாரின் அறிவுறுத்தலுடனே இந்த

நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் 250க்கும் மேற்பட்டபொலிஸ்நிலையங்களுக்குஅரசியல் ரீதியிலேயே பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நியமனம் வழங்கப்பட்டிருந்தன என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்ன தெரிவித்திருந்தார். அவ்வாறான பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடனேயே எங்களுக்கு பணியாற்ற வேண்டி இருக்கிறது. அதேநேரம் இந்த போதைப்பொருள் கடத்தல் வியாபார வலையமைப்பின் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். அதனால் போதைப்பொருள் வியாபாரத்தின் இறுதிப் பகுதியைப் பிடித்துக்கொண்டு, அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாலும் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் அவ்வாறே இடம்பெற்று வருகின்றன. அதனால் அரசியல்வாதிகளையும்கைதுசெய்யநாங்கள் தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மீண்டும் பாதாள உலக சம்பவங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இதில் குறுகிய சந்தர்ப்பவாத அரசியலும் உள்ளது. எனவே போதைப்பொருள் மற்றும் பாதாள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர்கள் மட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலிஸ் மா அதிபரிடம் உள்ளது. மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை மதிக்குமாறு அனைத்து பொலிஸ் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## சர்வதேச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்சிக்கான நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளோம். சர்வதேச பிணைமுறியாளர்களுடனான தொடக்ககட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாட்டு கடனை மீளச் செலுத்தல் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடன் மறுசீரமைப்பு பணிகளை நாணய நிதியம் முன்னெடுக்காது. ஆளும்தரப்பே முன்னெடுக்கவேண்டும். இருதரப்பு மற்றும் பிணைமுறிக் கடன்களை மறுசீரமைக்கவேண்டும்.

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட 5.8 பில்லியன் டொலர்கள், சீன எக்சிம் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 4.2 பில்லியன் டொலர்கள், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 3.3 பில்லியன் டொலர்கள், பிணைமுறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட 2 பில்லியன் டொலர் கள் உள்ளிட்ட கடன்களை

மறுசீரமைப்பதற்கு கடந்த ஆளும்தரப்பு செப்டெம்பர் மாதமே இணக்கப்பாட்டை எட்டியது.

சர்வதேச கடன் மறுசீரமைப்பில் கடந்த ஆட்சியாளர்களே99சதவீதஇணக்கப்பாட்டை எட்டிவிட்ட நிலையில் மிகுதி ஒரு சதவீதமான கடன் மறுசீரமைப்புக்கான பணிகளையே முன்னெடுக்க வேண்டியுள்ளது. குவைத், சவூதி அரேபியா, ஈரான்

மற்றும் பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்து பெற்றுக் கொண்ட 300 மில்லியன்

டொலர்கள் கடன்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொள்ளவேண்டும்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த ஆளும்தரப்புமுன்னெடுத்தநடவடிக்கைகளைத் தொடர்ந்துமுன்னெடுக்கவேண்டியகட்டாயம் காணப்படுகிறது. புதிதாக திட்டங்களை செயற்படுத்தினால் கடன் மறுசீரமைப்பு விவகாரம் இழுபறி நிலைக்குள்ளாக்கும். அது பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும். இதற்கமைய டிசெம்பர் 20 அன்று சர்வதேச பிணைமுறியாளர்களுடன் பரிமாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு உரிய திட்டங்கள் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கானஇடைக்காலகணக்கறிக்கையில் அரச சேவையாளர்களுக்கும், ஒட்டுமொத்த மக்களுக்கும்

நிவாரணம் வழங்கப்படும். பொருளாதார மீட்சியின் பயனை நாட்டு மக்களுக்கு முழுமையாகபெற்றுக்கொடுப்போம்என்றார்.

## மன்மோகன்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நிபுணராக இருந்தவரான இவர் மத்திய வங்கியின் ஆளுநராகவும் பணியாற்றியுள்ளார்.

மன்மோகன் சிங் இந்தியாவின் 13ஆவது பிரதமராக 2004 முதல் 2014 வரை பதவி வகித்தார். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் உச்சத்தை அடைந்து போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றபோது இந்தியாவில் ஆட்சியில் இருந்தார்.

## நாணய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்பிக்க போவதாகக் குறிப்பிட்டனர். தற்போது சதொச விற்பனை நிலையத்திலாவது அரிசி இருக்கிறதா? அரிசியையும் தேங்காயையும் ஒன்றாக வழங்குவதாகக் கூறினார்கள். வழங்கினார்களா? இல்லை. அரிசி ஆலை மாபியாக்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார்.

## இரவுக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வாகன சாரதிகளுக்கு தெளிவாக தெரியும் வகையில் ஒளி பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் ஒளிரும் கையுறைகளை உத்தியோகத்தர்கள் அணிய வேண்டும். வாகனங்களை நிறுத்துவதற்காக தற்போது பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்டுள்ள சிவப்பு மின் சமிக்ஞை விளக்குகளை முடிந்தவரை பயன்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய

அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை இரவு நேர கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்து கண்காணிக்குமாறு சகல பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் போக்குவரத்து பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஹிக்கடுவைக்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிக்கடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடந்துவ கடற்கரையில் புதன்கிழமை பிற்பகல் நீராடிக் கொண்டிருந்த தாயும் மகளும் எதிர்பாராத விதமாக கடலலைகளால் அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கியுள்ளனர்.

விரைந்து செயற்பட்ட பிரதேசவாசிகள் இருவரையும் மீட்டு கராபிட்டிய தேசிய வைத்தியசாலையில்சேர்த்துள்ளனர்.எனினும் நீரில் மூழ்கிய 57 வயதுடைய இந்தியப் பெய் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்தனதுமகன், மகள்மற்றும் மற்றொருவருடன் நீராடிக் கொண்டிருந்த நிலையில் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இதேவேளை, ஹிக்கடுவ கடற்கரையில் நீராடிக்கொண்டிருந்த வெளிநாட்டவர்கள்நால்வர் கடல் அலைகளால் அடித்துச்செல்லப்பட்ட நிலையில், அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த உயிர் பாதுகாப்பு சுழியோடிப் படைப்பிரிவினர் விரைந்து செயற்பட்டு நீரில் மூழ்கியவர்களைப் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

சுற்றுலாவுக்காக வருகைத் தந்திருந்த 33 தொடக்கம் 48 வயதுக்கு இடைப்பட்ட ரஷ்யர்களே இவ்வாறு மீட்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சிகிச்சைக்காக அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஹபரணைக் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மித்த காட்டில் ஏதோ தீப்பற்றி எரிவதாக வீதியில் பயணித்த ஒருவர் மின்னேரியப் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அவர்கள் அங்கு சென்று தீயை அணைத்து சடலத்தை மீட்டனர்.

புதன்கிழமை இரவு 10 மணியளவில் வாகனம் தீப் பற்றி எரியத் தொடங்கியதாகவும் அப்போது கெப் ஹபரணையை நோக்கி நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அதில் யாரும் இருந்ததை எவரும் பார்க்கவில்லை எனவும் மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் தாம் அங்கு சென்றபோது வாகனத்தில் எரியுண்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருவரைக்கொன்று அவரது சடலத்தை 'கெப்' வாகனத்தில் வைத்து எரிப்பதற்காகவே கெப் இந்தப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தீயில் எரிந்த 'கெப்' வண்டி, கொழும்புப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது என்பதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

வண்டியில் இருந்து மீட்கப்பட்ட சடலம் கம்பஹாதெகடனபிரதேசத்தைச்சேர்ந்தஅறுபத்து நான்கு வயதுடைய ஆண் ஒருவருடையதாக இருக்கலாம் என்றும் மின்னேரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எரிந்த 'கெப்' வண்டிக்கு அருகில் கிடந்த ஒரு சூட்கேஸில் இருந்து பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் ஏனைய ஆவணங்கள் தெகடன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடையவையாக இருந்தன. எரியுண்ட நபரின் ஆவணங்களாக அவை இருக்கலாம் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்ட சூட்கேஸில் உயிரிழந்த நபரின் சில ஆடைகள், தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தின்பிரதியொன்றும்இருந்ததாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

## சபைமுதல்வர்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டத்தைப் பயன்படுத்தி சபாநாயகர் பதவி விலகியதைப் போன்றே சபை முதல்வரும் பதவி விலகவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அவர் கொழும்பில் நேற்று

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சுனாமி நினைவு தினம் பூந்தோட்டத்தில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது







வவுனியா, பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான 20 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவு தூபியில் குறித்த பிரார்த்தனைநிகழ்வுகள் உணர்வுபூர்பமாக அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களிற்கு காலை 9.25 - 9.27 வரை இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், நினைவுதூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவு தூபியானது சுனாமி பேரலை ஏற்பட்டு 31 ஆம் நாளில் நரசிங்கர் ஆலய நிர்வாகத்தினரால் அமைக்கப்பட்டிருந்ததுடன், இலங்கையின் முதலாவதாக அமைக்கப்பட்ட தூபியாகவும் விளங்குகின்றது.

தற்போது நகரசபையால் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. நரசிங்கர் ஆலயத்தின் உப தலைவர் கோ.சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், முத்து முகமது, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் இந்து, பௌத்த மதகுருமார்கள், பொது அமைப்புகள், கிராமமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.(100)

# சுனாமியில் இறந்தவர்களை நினைவுக்கூர்ந்த மலையகம்

(கிஷாந்தன்)

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 20 ஆண்டு நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும்துயரகரமானநிகழ்வாக காலை 9.25க்கு ஆழி பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ்அனர்த்தத்தில்உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபையின்ஏற்பாட்டில்ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் இதில் கலந்துக்கொண்டனர்.





# ரஹ்மத் சமூக சேவை அமைப்பால் மாபெரும் குருதிக் கொடை முகாம்

(அஷ்ரப்கான்)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்ததட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் வியாழக்கிழமை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அமைப்பின் செயலாளர் முஹம்மட் முனா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரி டாக்டர் சுபோதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு செயலாளர் முஹம்மட் முனா உரையாற்றும்போது -

எமது பிரதேச வைத்தியசாலைக்கு ஏற்பட்டிருக்கின்ற இரத்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக இவ்வாறான இரத்தக்கொடை நிகழ்வுகள் இடம்பெற வேண்டும். அதிலும் குறிப்பாக ஓர் உயிரை வாழ வைப்பது ஒரு சமூகத்தை வாழ வைப்பது போன்ற நன்மையை பெறக்கூடிய ஒரு செயற்பாடாகும்.

எனவே, இந்தவிடயம்ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே நாம் முயற்சித்து இந்த குருதிக்கொடையை ஏற்பாடு செய்திருக்கிறோம். எமது அமைப்பின் ஊடாக

இச்சமூக சேவையை தொடர்ந்தும் செய்து வருகிறோம் என்றும் கூறினார்.

இரத்ததான முகாமில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்துகொண்டு தங்களது இரத்தங்களை தானம் செய்திருந்தார்கள்.

இந்த நிகழ்விலே அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், பொதுமக்களும் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# டெங்கு ஒழிப்பு செயலமர்வு

(ஹமீட்)

அட்டாளைச்சேனை சம்புநகர் அல் - மினா வித்தியாலயத்தில் நேற்று (வியாழக்கிழமை) 'டெங்கு ஒழிப்பு தொடர்பில் பாடசாலை சமூகத்திற்கான விழிப்புணர்வு செயலமர்வு' பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற

இச்செயலமர்வில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொது சுகாதாரப் பரிசோதகர் ஜெசீர் பிரதம வளவாளராக கலந்து கொண்டு டெங்கு நுளம்பு எவ்வாறு உருவாகின்றது. இதன் தாக்கம் என்ன இதை எவ்வாறு தடுக்கலாம். நமது பிள்ளைகளையும் நமது குடும்பத்தையும்

நமது சமூகத்தையும் இந்த





நோய்த் தாக்கத்திலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறலாம் போன்ற பல்வேறு விளக்கங்கள் இதன்போது முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் பாடசாலையில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து சிரமதான பணியில் ஈடுபட்டமையை விசேடமாக குறிப்பிடலாம்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# செயலே முக்கியம்

**ரணில்–ராஜபக்சஆட்சியில்போதைப்பொருள்கடத்தல்காறர்களையும் பாதாள உலகக் குழுக்களையும் ஒழிப்பதற்காக 'யுக்திய' என்ற பெயரில் சிறீலங்கா காவல்துறையினர் பெரும் நடவடிக்கையை மேற்கொண்டனர். இது தொடர்பில் ஊடகங்கள் மூலம் பெரும் பரப்புரையும் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்த நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டனர்.**

**பல மாதங்களாகத் தொடர்ந்த இந்த நடவடிக்கையின் கீழ் பல ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு ஏற்கனவே நிரம்பி வழியும் சிறைகளில் இவர்களும் அடைக்கப்பட்டார்கள். போதைப் பொருளுக்கும் பாதாள உலகக் குழுக்களுக்கும் எதிரானது என்று பெருமெடுப்பில் பரப்புரை செய்யப்பட்ட இந்த நடவடிக்கையின் பெறுபேறு என்ன என்று கேட்டால் எதுவும் இல்லை என்றுதான் சொல்லமுடியும். ஏனெனில் இந்த நடவடிக்கை காரணமாக போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையிலோ பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகளிலோ எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.**

**இந்த நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதே பாதாளக் குழுக்கள் தமக்கிடையே மாறி மாறி சுட்டுக்கொண்டு இறந்த சம்பங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன. அதேபோன்று போதைப் பொருள் விற்பனையும் தங்கு தடையின்றித் தொடர்ந்தது. ஊடகங்களில் பரப்பரை செய்யப்பட்டதைத் தாண்டி, போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு முக்கிய புள்ளிகூட இந்த நடவடிக்கையின் மூலம் கைது செய்யப்படவில்லை. போதைப் பொருள் நுகர்வோரும், சில்லறை விற்பனையாளர்களும் இடத்துக்கிடம் கைமாற்றுவோரும் பொருளை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கடல்வழியாக எடுத்துவருவோருமே இந்த நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டனர். ஆனால் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையின் அடிநாதமான ஒருவர் கூடக் கைது செய்யப்படவில்லை.**

**இந்த இரு குற்றச் செயல்களுடனும் தொடர்புடையவர்கள் அரசியல்வாதிகள், அவர்களே இவற்றின் முக்கிய சூத்திரதாரிகள் என்று தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டப்பட்டு வருகின்றபோதும் அவர்களில் ஒருவர்கூட இந்த நடவடிக்கையின்போது விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. போதைப் பொருளை ஒழிப்பதற்கும் பாதாள உலகக் குழுக்களை முடக்குவதற்கும் எந்தவொரு அழுத்தத்திற்கும் அடிபணி மாட்டோம் என்று அப்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சரும் பதில் பொலிஸ் மா அதிபரும் வாய் கிழியக் குரல் கொடுத்திருந்தாலும் எதுவும் நடக்கவில்லை.**

**இப்போது, புதிய ஆளும்தரப்பும் இது விடயத்தில் அறிக்கைகளை விடத் தொடங்கியிருக்கின்றது. போதை வியாபாரத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். அவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.**

**”பாதாள நடவடிக்கை மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தின் கீழ் சம்பளம் பெறும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர். இவர்களின் பாதுகாப்புடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. சில கிராமங்களில் ஒட்டுமொத்த பொலிஸ் நிலையமும் போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான் ருவன்வெல்லவில் உள்ள முழு பொலிஸ் படையையும் நாங்கள் இடமாற்ற வேண்டியிருந்தது. புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தினை எடுக்க வேண்டியிருந்தது.**

**இந்த போதைப்பொருள் கடத்தல் வியாபார வலையமைப்பின் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். அதனால் போதைப்பொருள் வியாபாரத்தின் இறுதிப் பகுதியைப் பிடித்துக்கொண்டு, அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாலும் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் அவ்வாறே இடம்பெற்று வருகின்றன. அதனால் அரசியல்வாதிகளையும் கைதுசெய்ய நாங்கள் தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்” என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.**

**இந்தக் குற்றச்சாட்டுக்களை தேசிய மக்கள் சக்தி எதிர்க் கட்சியிலிருக்கும்போதிருந்தே தெரிவித்து வந்திருக்கின்றது. இப்போது ஆட்சி அவர்களின் கைகளில்தான் இருக்கின்றது. அதிகாரமும் இருக்கின்றது. நடவடிக்கை எடுப்பது அவர்களின் பொறுப்பு. நடவடிக்கை எடுப்போம், அரசியல்வாதிகளைக் கைது செய்வோம் என்கிற வீர வசனங்களைவிட உண்மையான நடவடிக்கையைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி நிறைவேற்றவில்லை என்கிற குறை இருக்கின்ற நிலையில் போதைப்பொருள் விடயத்திலும் ஆளும்தரப்பின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாக அன்றி செயலுருப்பெறவேண்டும்.**

# தர்மமும் நியாயமும்

என். சத்திய மூர்த்தி

அண்மையில் தலைநகர் கொழும்புவில் நோர்வே நாட்டு தூதுவர் மே–எலின் ஸ்ரேனரை தமிழ் அரசு கட்சியின் சுமந்திரனும் சாணக்கியனும் சந்தித்தது ஒரு சில முக்கிய விடயங்களை அடிக்கோடிட்டுள்ளது. ஒன்று, நாடாளுமன்ற உறுப்பினரோ இல்லையோ, இன்னும் சில காலத்திற்காவது, குறிப்பாக இனப்பிரச்சினை விடயங்களில், சர்வதேச சமூகம் சுமந்திரனின் கருத்துக்களை கோரிப் பெறும் என்பது. இதுவே, பிற கட்சித் தலைவர்களுக்கோ மற்ற தமிழ் கட்சியினைச் சேர்ந்தோருக்கோ பொருந்தும் என்று கூறமுடியாது.

இரண்டாவது, நோர்வே தூதுவரை சந்தித்த இருவரும் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்கா அரசின் ஆரம்ப கால நகர்வுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இருக்கவில்லை என்று கூறினர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இது விடயத்தில், அவர்கள் பயங்கரவாத தடுப்பு சட்டம், மாகண சபை தேர்தல்கள் மற்றும் புதிய அரசமைப்பு ஆகியவற்றைக் குறிப்பிட்டு கருத்து தெரிவித்தனர் எனவும் செய்திகள் கூறுகின்றன.

இங்குதான் பிரச்சினையே ஆரம்பிக்கிறது. ஏதோ, தமிழ் அரசு உள்ளிட்ட தமிழ் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசநாயகாவிற்கு வாக்களித்தது போலவும், அவரும் தனக்கு முன்பு பதவியில் இருந்தவர்களை போலவே, தமிழர்களது முதுகில் குத்திவிட்டார் என்பது போலவும் சுமந்திரனும் சாணக்கியனுமாக ஓர் எண்ண உருவாக்கத்திற்கு முயற்சித்துள்ளார்கள். அதனை நோர்வே தூதுவர் முழுமையாக நம்பினாரா, என்பது தெரியவில்லை.

இந்த இருவரில், ஒப்பீட்டளவிலாவது சுமந்திரன் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர். காலம் சென்ற சம்மந்தனுக்குப் பின்னர், அதிலும் குறிப்பாக இன்று கோலோச்சிக் கொண்டிருக்கும் தமிழர் தலைவர்களில், அதிக அளவில் சர்வதேச சமூகத்துடன் உறவாடிப் பழக்கப்பட்டவர். ஆனால், அவரும்கூட, தனக்கு முந்தைய அரசியல் தலைமுறையினர் போல், 'மீண்டும் பிழை விட்டோம்' அல்லது 'மீண்டும் வஞ்சிக்கப்பட்டோம்' என்ற கீறல் விழுந்த ரெக்கார்டை பாட விடுவது, புதிய தலைமுறை தமிழ் வாக்காளர்களை நகைப்பில் ஆழ்த்தும் என்பதைப் புரிந்துகொண்டார் போன்று தெரியவில்லை.

சுமந்திரனைவிட, அவருடன் சென்ற சாணக்கியன் வயதில் மிகக் குறைந்தவர். தமிழ் அரசியல் பரப்பிலும், குறிப்பாக சர்வதேச சமூகத்துடனான ஒற்றுடவாடலிலும் அவர் சுமந்திரனின் சீடர் என்று வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். ஆனால், அவர், தமிழ் அரசியல் பரப்பில், சுமந்திரன், கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்றோருக்கு அடுத்த தலைமுறையைச் சார்ந்தவர். தமிழர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலத் தலைவர்.

இவர்கள் இருவருமே, தங்கள் தகைமைக்கு ஒவ்வாதவகையில், இனப்பிரச்சினை குறித்தும், அநுர அரசின் நிலைபாடுகள் குறித்தும் இது போன்ற சர்ச்சைக்குரிய கருத்துக்களை மட்டுமே முன்வைப்பார்கள் என்றால், தமிழர் அரசியலுக்கே தமிழ் வாக்காளர்கள் மத்தியில் எதிர்காலம் இல்லாமல் போய்விடும். இருப்பதாக கருதப்படும் நிகழ்காலமும் சூன்யமாகவே தொடரும்.

## நாணயத்தின் பக்கங்கள்

நாடாளுமன்றத் தேர்தலில் எட்டு ஆசனங்களை பெற்று, இன்னமும் சிறிதாவது மவுசு பெற்ற கட்சியான தமிழ் அரசில் ஒரு தரப்பினரின் நிலை இதுவென்றால், அந்தத் தரப்பிற்குத் தலைமைத்துவம் வழங்கும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் பற்றி கேட்கவே வேண்டாம். அண்மையில் கானடா சென்றிருந்த அவர், அங்குள்ள பிரதி அமைச்சர் ஒருவரை நேரில் சந்தித்தார் எனச் செய்திகள் கூறின.

அந்த செய்திகளின்படி, சிறீதரன், போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புகூறல் விடயங்களில், இலங்கை ஆளும்தரப்பிற்குச் சர்வதேசம் இனிக் கால நீடிப்பு வழங்கக் கூடாது என்று கோரிக்கை விடுத்தார். ஐநா மனித உரிமை அமைப்பில், இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னிலை நாடான அமெரிக்காவுடன் கானடாவும் முக்கிய பங்காற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிலும் குறிப்பாக, தொடர்ந்து, இலங்கை மனித உரிமை மீறல் விடயங்களில் வேறு எந்தவொரு நாட்டையும்விட, கானடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் ஆளும்தரப்பு அதிரடியாக முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது. அது, அந்த நாட்டில் வாழும் புலம்பெயர்ந்தோரின் வாக்குகளை குறிவைத்தே என்று கூறுவோர் உள்ளனர். இல்லை இல்லை, கானடா ஆளும்தரப்பும், ட்ரூடோவின் தலைமையும் மனித உரிமை மீறல் விடயங்களில் அதீதமாக அக்கறை காட்டுகிறது என்று கூறுவோரும் உள்ளனர்.

எது எப்படியோ, கொழும்புவில் சுமந்திரன்–சாணக்கியன் கோரிய அரசியல் ரீதியான அரச முன்னெடுப்புகளும், கானடாவில் சிறீதரன் கோரிய விடயங்களும் இரு துருவங்களை ஒத்த விடயங்கள். அவை, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று வாதிடுவார்கள் உள்ளனர். உண்மை. ஆனால், அதுவே, இனப்போருக்குப் பின்னரான இலங்கை சூழலில் நடைமுறை அரசியலுக்கு ஒவ்வாத விடயம்.

இதை தற்போதைய தலைமுறையினரும் புரிந்து கொள்ளவில்லை என்றால், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வும் கிடைக்காது. பொறுப்புகூறல் விடயங்களிலும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படாது.

காரணம் அநுரவும் போர் முடிவுற்ற காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்சாவும் அரசியல் எதிரிகளாக இருக்கலாம். ஆனால், பொறுப்புகூறல் விடயங்கள், நாட்டின் இராணுவத்தினர் சம்மந்தப்பட்டது. ஏதோ ஒரு விதத்தில் இராணுவத்தை காட்டிக் கொடுத்துவிட்டு, கொழும்பில் யாரும் ஆட்சியில் இருக்கமுடியாது. அரசியல் செய்யமுடியாது. அவர்களை தென்னிலங்கை மக்களும் வாக்காளர்களும் தலைமுறைகளுக்கும் மன்னிக்க மாட்டார்கள். இது தான் கசப்பான உண்மை.

## யாரிடம் அனுமதி?

இது இவ்வாறு இருக்க, தமிழ் அரசின் இரு தரப்பினரும் சர்வதேச சமூகத்தின் முன்பு கூறிய கருத்துகளுக்கு, கட்சியின் மத்திய குழுவோ அல்லது வேறு அமைப்போ அனுமதி அளித்திருந்ததா? முன்பு, சம்மந்தன் காலத்திய நிலைமை வேறு. அவர் காலத்திற்குப் பின்னர், அதிலும் அவர் படுத்தபடுக்கையாக ஆன பின்னர், கட்சியின் கொள்கை முடிவுகளை யார் எடுத்தார்கள்? யார் செயல்படுத்தினார்கள்?

இது போன்ற குழப்பங்களினாலும்தானே, முதலில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் பின்னர் தமிழ் அரசுக் கட்சியும் பிளவுண்டன. தற்போது, மாவை சேனாதிராசாவை ஒட்டி அரங்கேறிவரும் கட்சி தலைவர் பதவியை சூழ்ந்துள்ள குழப்பங்களின் அஸ்திவாரமும் அதுதான். தற்போது அந்தக் குழப்பங்களே கட்சியின் எழுபத்தைந்தாவது ஆண்டில், அந்த அஸ்திவாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது.

இதன் விளைவுதான், நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலித்தது. தமிழ் அரசுக் கட்சி மொத்தம் எட்டு ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், 'தமிழர் தலைநகர்' யாழ்ப்பாணத்தில், ஆளும் தேசிய மக்கள் சக்தி

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# தர்மமும்......

4ம் பக்கத் தொடர்ச்சி...........

கூட்டணியிடம் பெற்ற அடி, அவர்களை பொறுத்தவரை மரண அடிதான், பிற தமிழ் கட்சிகளைக் குறித்து சொல்லவே வேண்டாம்.

இதனை ஒட்டியே, தமிழ் அரசு கட்சிக்கு சுமந்திரன் பேச்சாளரா இல்லையா, என்ற குழப்பத்தை, சிறீதரன் தலைமையினால் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள சிறீநேசன் எழுப்பி உள்ளார். தலையில்லாமல் வால் ஆடாது. ஆனால், பிரச்சினை யார் பேச்சாளர் என்பதல்ல.

சுமந்திரன் அந்த பதவியை வகித்தாலும் இல்லை என்றாலும், அவருக்கு கருத்துச் சுதந்திரம் உண்டு. அந்த வகையில் கட்சியில் எந்தப் பதவியும் வகிக்காத அவரை, அயல்நாட்டு தூதுவர்களோ, அரசியல்வாதிகளோ, பத்திரிகையாளர்களோ அல்லது அறிவுஜீவிகளோ சந்தித்து பேசினால் அவர் தனது கருத்துக்களை கூறத்தான் செய்வார். அவை கட்சியின் கருத்தா அல்லது முடிவா என்று கேட்டால், அது வேறு விடயம்.

பிரச்சினையே, யாரிடம் பேசுவது, யாராக பேசுவது என்பதல்ல. மாறாக, எது குறித்து பேசுவது, என்ன பேசுவது என்பதில்தான் உள்ளது.

## கதிரைப் போராட்டம்

இந்தப் பின்னணியில், தமிழ் அரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் செய்வதற்கு ஒரே ஒரு விடயம்தான் உள்ளன. சுய பரிசோதனை. குறிப்பாக தென்னிலங்கை தலைமைகளையும் அடுத்தடுத்த அரச தரப்புகளையும் குற்றம் குறை சொல்லும் போது, உள் வீட்டிலேயே தங்களுடைய செயல்பாடு எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் தங்களது முகத்தையே கண்ணாடியில் அவ்வப்போது பார்த்து வரவேண்டும். இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. மாறாக காலம் இன்னமும் கனிந்தே உள்ளது.

இந்த பின்னணியில், தானும் இருக்கிறேன் என்று காட்டிக்கொள்ள, தமிழ் நாட்டில் வாழும் வரதராஜ பெருமாள், திடீரென்று தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டுள்ளார். தொடர்ந்து, இந்திய பிரதமர், பதிமூன்று குறித்து ஜனாதிபதி அநுரவிற்கு அழுத்தம் கொடுக்காததற்கு, இலங்கை மற்றும் இந்தியாவில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களே காரணம் என்று கூறி உள்ளார்.

வரதரின்கூற்றிலுள்ளசாராம்சத்தைவிட்டுவிட்டாலும், அவர் மட்டும் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதினாரா, அல்லது இப்போது முன்னெடுத்திருக்கும் பத்திரிகை செவ்வியை முன்னாலேயே செய்தாரா, என்ற கேள்வி எழுகிறது. என்ன, வட மாகாணத்தில், குறிப்பாக யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில், இடதுசாரிக் கட்சியான தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் இருப்பதால், அதே இடதுசாரி தமிழ் தலைமைத்துவம் வழங்கி வந்த அவருக்கும் எதிர்பார்ப்போ, ஆசையோ தோன்றி இருந்தால், ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், இந்தியாவில் வாழ்ந்துகொண்டு, 'இந்தியாவின் கைகூலி' என்று முன்பு பெயர் எடுத்த அவர், இவ்வாறெல்லாம் பேசுவது, தமிழர் அரசியலில், தன்னை முன்னிலைபடுத்திக் கொள்வதற்கு, புது டெல்லியின் ஆதரவு இருக்கிறது என்பது போல காட்டிக்கொள்ளத்தான், என்று சமூக வலைதளங்கள் இப்போதே கருத்து தெரிவித்து வருகின்றன. ஆனால், அதில் எல்வாம் உண்மை இருப்பதாக தெரியவில்லை.

## 'ரிங்க' -மாஸ்டர்கள்

அதற்கு அப்பால் சென்று, இலங்கை தமிழ் அரசியல் தலைவர்களும் அவர்களுடைய புலம்பெயர்ந்த 'ரிங்–மாஸ்டர்களும்' தமிழ்நாடு அரசியல்வாதிகளை காக்காய் பிடிப்பதோ அல்லது அவர்களைத் தேர்தல் ரீதியாக தங்களுக்குத் தமிழ் நாட்டில் இல்லாத வாக்காளர் ஆதரவை வைத்து மிரட்டுவதோ, காலம் கடந்த செயல். இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையை உலகளாவிய தமிழர் இனப்பிரச்சினையாக உருவகப்படுத்தி, அதில் ஓரளவு வெற்றி பெற்றதெல்லாம் விடுதலை புலிகள் அமைப்போடு போய்விட்டது. என்றாலும், இனப்போர் உச்சக்கட்டத்தில் இருந்த 2009 ஆண்டு, இந்திய நாடாளுமன்ற தேர்தலில், தமிழ் நாட்டின் வாக்கெடுப்பு முடிவுகளை நினைவு கூர்ந்தால், பல உண்மைகள் புரியும்.

தற்போதுள்ள தமிழ் நாடு அரசியல் தலைமைகள் அனைத்துமே, இங்குள்ள தமிழ் தலைவர்கள் அனைவருமே, தங்களை இலங்கையின் உள்நாட்டு அரசியலில் பகடைகாயாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நன்றாகவே உணர்ந்து விட்டார்கள். அதனால்தான், இங்கிருந்து பலரும் தொடர்ந்து கடிதம் எழுதி வந்தாலும், தமிழ் நாட்டில் உள்ள முக்கிய கட்சி தலைவர்கள் எவருமே இவர்களை சந்திப்பதையோ அல்லது அவர்களுடன் ஒரு புகைபடம் எடுத்துக்கொள்வதையோகூடத் தவிர்த்து வருகிறார்கள்.

## புளித்துப் போன தலைமைகள்

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அதிக வாக்குகளையும் அதிக ஆசனங்களையும் கொடுத்த தமிழ் வாக்காளர்கள், இன்னமும் தமிழ் அரசுக் கட்சிக்கு மொத்தத்தில் எட்டு ஆசனங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதில். பெரும்பான்மையானவை கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைத்தவை என்பது வேறு விடயம்.

ஆனால், இந்த உண்மையை மட்டுமாவது கிரகித்துக் கொண்டிருந்தால், புளித்துப் போன வட மாகாண தமிழ் தலைமைகள், இன்னமும் குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டிக்கொண்டு, கதிரை போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். இது தமிழ் அரசு கட்சி குறித்த கண்டனம் மட்டுமல்ல. அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் பொதுவான விடயம்.

இந்த மாயைக்குள் இருந்து விடுபட்டால் மட்டுமே, இவர்களது பெயர் நிலைத்து நிற்கும். இறந்தவரை நிந்தனை செய்யக்கூடாதுதான். ஆனால் தந்தை செல்வாவை இன்னமும் பூசிக்கும் தமிழர் தரப்பு, அவரது தளபதியாக இனங்காணப்பட்ட அமிர்தலிங்கத்தை மறந்துவிடாத தற்போதைய தலைமுறை, அண்மையில் இறந்தசம்மந்தனைமட்டும்ஏன்ஒதுக்கித்தள்ளினார்கள்?

நிலம் தொடாது, அன்னாரது பூதவுடலை யாழ்பாணத்திற்குக் கொண்டு வந்த சுமந்திரனின் அரசியல் தந்திரம் ஆகட்டும், ஓர் இரவுகூட அவரது உடலுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவோ அல்லது பாதுகாவலாகவோகூட நிற்காத அவரது கட்சியினரும் முன்னாள் கூட்டமைப்பு பங்காளிகளும் ஆகட்டும், அவர் தொடர்ந்து தலைமைத்துவம் நல்கிய அமைப்புகளுக்கு இன்று உரிமை கோருவது எந்த விதத்தில் நியாயம்? தர்மம்?

அல்லது தர்மமும் நியாயமும் செத்துவிட்டது என்பது தான் சம்மந்தனின் மறைவு உணர்த்திய உண்மையா? இல்லையென்றால், தமிழர் தலைமை என்றாலே, தன்னிச்சைக்கு முடிவு எடுப்பது என்ற பிரபாகரனின் வழிமுறையை அவரும் பின்பற்றி, தனது அரசியல் வாரிசுகளுக்கும் பரிசாக அளித்துச் சென்றிருக்கிறாரா?






# பத்தியோடு பேணப்படும் பிள்ளையார் பெருங்கதை

ஈழவளநாட்டுச்சைவர்கள்பன்னெடுங்காலமாகபக்தியோடு அனுசரிக்கும் விரதங்களில் பிள்ளையார் பெருங்கதை நோன்பு என்ற விநாயக விரதமும் முக்கியமான ஒன்றாகும்.

கார்த்திகை மாத திருக்கார்த்திகை பௌர்ணமி கழிந்த மறுநாள் தொடங்கி அடுத்து வரும் வளர்பிறை சஷ்டி ஈறாக இருபத்தொரு தினங்கள் இந்த நோன்பு நோற்கப்படுகிறது.

பார்க்கவபுராணம்என்றவிநாயகர்புராணத்தில்சிறப்பித்துப் பேசப்படும் இந்த விரதம் விநாயகப்பெருமானுக்கான சிறப்பு மிக்க விரதங்களில் முதன்மை பெறுகிறது.

நட்சத்திரம், திதி என்ற இரு வகை கணிப்பிலும் சிறப்புற்ற இந்த விநாயக விரதம் கார்த்திகை கார்த்திகை பூரணை கழிந்த பின்னாளில் தொடங்கி சதயம் தொட்ட சஷ்டி நன்நாளில் நிறைவு பெறுகிறது.

தற்கால தமிழகத்தில் பெரிதும் அறியப்படாததான இந்த விரதம் அங்கு நாட்டுக்கோட்டை நகரத்தாராலேயே சிறப்பாகப் பேணப்படுகிறது. ஆயினும், இலங்கையில் இவ்விரதம் பன்னெடுங்காலமாக பக்தியோடு பேணப்படுகிறது.

புராணங்களில் இவ்விரதத்தை அனுசரித்து கண்ணனும், பாண்டவரும், கந்தனும், இலக்கண சுந்தரியும் இன்னும் பலரும் வேண்டியன வேண்டியாங்கு எய்தினர் என்று சொல்லப்படுகிறது.

இருபத்தொரு தினங்கள் (மூன்று வாரங்கள் ) அனுசரிக்கப்படும் இவ்விரத காலத்தில் யாழ்ப்பாணத்து சுன்னாகம் வரத பண்டிதர் எழுதிய பிள்ளையார் கதை படிக்கப்படுவது வழக்கம்.

எப்படி இந்த விரதம் ஈழத்தில் தனிச்சிறப்புடன் காணப்படுகிறதோஅதுபோலஇக்கதையும்தனிச்சிறப்புடையது.

இலக்கியச்சுவையும் சுருங்கச் சொல்லும் பாங்கும் இசையோடு பாடத்தக்க அமைப்பும் எளிய தமிழும் பக்திப்பெருக்கும் மிக்க இந்தப் பிள்ளையார் கதை இந்த இருபத்தொருதினங்களும் அடியார்களால் மிகுந்த பக்தியோடு படிக்கப்படுகிறது.

இந்த இலக்கியத்தை எழுதிய வரதபண்டிதரின் முழுப்பெயர் அரங்கநாத பண்டிதர் வரதபண்டிதர் என்பதாகும். ஒல்லாந்தர் காலத்தில் சுன்னாகத்தில் வாழ்ந்த இவரை அந்தண மரபில் ஸ்ரீ வத்ஸ கோத்திரத்தில் தோன்றியவர் என்பர். இந்த வரத பண்டிதரால் இயற்றப்பட்ட ஏகாதசிப்புராணம், சிவராத்திரி புராணம் முதலியவும் சிறப்புடையன.

இந்த விநாயக விரத காலத்தில் குறித்த பிள்ளையார் கதை மட்டுமன்றி, வடமராட்சிப்பகுதியில் பிள்ளையார் புராணம் என்ற சிற்றிலக்கியமும் படனம் செய்யப்படுகிறது. இதை எழுதியவர் பெயர் அறிய இயலாதுள்ளது.

குறித்த பிள்ளையார் கதையும் பிள்ளையார் புராணமும் சொல்லும் செய்திகள் பெரும்பாலும் ஒன்றாகவே அமைந்துள்ளன.

பிள்ளையார் குணம் கொண்டு குற்றங்கள் தீர்ப்பவர். (குணமுடையனாயிருந்து குற்றங்கள் தீர்க்கும் கணபதி) அதனை இந்நூல்கள் குறிப்பிட்டு விநாயகரிடம் எம்மை ஆற்றுப்படுத்துகின்றன.

பிள்ளையார் பெருங்கதை என்ற இவ்விரதகாலத்தில்ஈழத்துப்பிள்ளையார் ஆலயங்களில் கணபதி சஹஸ்ரநாம அர்ச்சனை சிறப்புடையது.

இந்த ஆயிரம் நாமங்களால் தினமும் ஐந்து அர்ச்சகர்கள் அர்ச்சிப்பதையும் அதன் வழி இருபத்தொரு நாளில் லக்ஷ நாம அர்ச்சனை நிகழ்வதையும் பல இடங்களில் அவதானிக்கலாம்.



வட மொழிப்புராணங்களிலிருந்து பெறப்பட்ட இந்த சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் எண் வரிசையில் (ஒன்று முதல் கோடி, அநந்தம் என்று )கணபதியின் பெருமைகளை விரிவாகச் சொல்லிப் போற்றுகிறது.

இதனை விடவும், இவ்விரத நிறைவு நாளில் பல்வேறு கோயில்களிலும் கஜ முகசம்ஹாரநிகழ்ச்சியும் இடம்பெறுவது ஈழநாட்டு வழக்கமாகும்.

கந்தபுராணத்தை அடியொற்றி நிகழும் இந்த வைபவத்துடன் சதயம் தொட்ட சஷ்டி நல்விரதம் நிறைவு பெறும்.

இலங்கையில் கருவறையில் விநாயகரே காட்சி தரும் பல நூற்றுக்கணக்கான விநாயகர் ஆலயங்கள் உள்ளன.

யாழ்ப்பாணத்தரசர்கள் அமைந்த பழைமையான பிள்ளையார் ஆலயங்கள், சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த கணபதி கோயில்கள் என்றும் பலவற்றை யாழகத்தில் நாம் தரிசிக்கலாம்.

பிள்ளையாரே கர்ப்பகிரஹத்தில் காட்சி தரும் பேராலயங்களான இவை கூட, ஈழத்தின் தனிச்சிறப்பே ஆகும்.

வழிபடும் அவர் இடர் கடிந்து அருளும் விக்ன விநாயக வள்ளலை ஏத்துவோம். திருவருள் பெறுவோம்.

**மயூரகிரி சிவாச்சார்யார்**



# சுனாமியின் 20 வருட நிறைவு நினைவாக குச்சவெளிப் பிரதேச சபையில் அஞ்சலி




(ஹஸ்பர்)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று இன்று 20 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அதில் மரணித்த மற்றும் காணாமல்போன உறவுகளுக்காக நேற்று காலை 09.25 மணி முதல் 02 நிமிடங்கள் மௌன அஞ்சலி மற்றும் பிரார்த்தனை நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தில் , குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் வெ.இந்திரஜித் ஆலோசனைக்கமைய பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் டி.பிரதீப் தலைமையில் குச்சவெளி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் சுனாமி அனர்த்தம் தொடர்பான விசேட உரையை குச்சவெளி பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.தட்சாயினி மற்றும் பேரழிவின் பாதிப்புகள் மற்றும் பிரார்த்தனைகளை பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி ஏ.ஆர்.பர்சூக் ஆகியோர் நிகழ்த்தினர்.

# கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக வழிபாடு




வவுனியா - கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவாக விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலயதர்மகர்த்தா சபையும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது உயிரிழந்தவர்களிற்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், இறந்தவர்களிற்கு ஆத்ம சாந்தி வேண்டி நெய் தீபம் ஏற்றப்பட்டு மோட்ச வழிபாடும் இடம்பெற்றது.

இதில் அந்தணச் சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், ஆலய பகத்தர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மோட்ச வழிபாட்டில் ஈடுபட்டனர். (100)

# மூதூரில் சுனாமி நினைவும் நினைவுத் தூபி திறப்பும்

(ஹஸ்பர்)

20 ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பில் பொதுமக்களின் பங்களிப்புடன் நேற்று (வியாழக்கிழமை) காலை 9.00 மணி அளவில் மூதூர் இறங்குதுறைமுக வாசலில் சுனாமி நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் 2004.12.26 ஆம் திகதி சுனாமி ஆழிப்பேரலையால் மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மரணித்த ஆத்மாக்களுக்கான நினைவாஞ்சலியும் மற்றும் சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன மேலும் இரத்ததான முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நினைவு தினத்தில் முதன்மை அழைப்பாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து சிறப்பித்ததோடு மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கே.சுகுணதாஸ் ,சமூக நிறுவன உறுப்பினர்கள்,



சர்வமத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் கலந்து சிறப்பித்தனர்.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் அவர்களின் புத்தாக்கமான சமூகவியல் செயற்பாடுகள் உண்மையில் பாராட்டத்தக்கது. குறிப்பாக இலக்கியம், சமூக அபிவிருத்தி மற்றும் சகவாழ்வு தொடர்பாக மக்களை மையப்படுத்திய வேலைத்திட்டங்களை சமூக நிறுவனங்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தி அரச நிறுவனத்தினது சமூகம் சார்ந்த இயங்கியலை உறுதி செய்து வருகின்றார்.

# துறைநீலாவணை மகா வித்தியாலய 2 மாணவியர்கள் சாதனை படைப்பு

(பாறுக் ஷிஹான்)

2024 தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயல மத்தியஸ்த பிரிவினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கனிஷ்ட பிரிவு மற்றும் சிரேஸ்ட பிரிவில் மண்முனை தென் எருவில்பற்று (களுவாஞ்சிக்குடி) பிரதேச செயலக பிரிவில் உள்ள பட்டிருப்பு வலயத்தில் உள்ள துறைநீலாவணை மகாவித்தியாலய மாணவர்கள் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.



இதில் கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தை சுபராஜ் கிருஸ்டிகாவும் சிரேஸ்ட பிரிவில் இரண்டாவது இடத்தை ற.ஹஸ்தனியும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தலைமையில் 34 ஆவது மத்தியஸ்த தின நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர் ஜீ. பிரணவன் , நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். ஆஸாத், நீதி அமைச்சின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.முஹமட் அஜுன் உட்பட விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின் தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் இக்கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி, நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் துறைநீலாவணை மகா வித்தியாலய அதிபர் பிரதி, அதிபர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

# செட்டிகுளம் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

செட்டிகுளம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணிப் பிரச்சினைகள், சுகாதார வைத்திய சேவை, கல்வி, பொருளாதார அபிவிருத்தி, மேச்சல் தரை, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், வருகை தந்த கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்து முகமது, பிரதேச செயலாளர் திருமதி சுலோஜனா, மற்றும் அரச அதிகாரிகள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 100

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியிலிருக்கும் போது அரிசியை பதுக்கி வைத்துள்ள டட்லி சிறிசேனவைக் கைதுசெய்து, மக்களுக்குநிவாரணவிலையில் அரிசியை விநியோகிப்பதாக அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். ஆனால் தற்போது அரிசி மாத்திரமின்றி தேங்காய், முட்டை என அனைத்து அத்தியாவசிய உணவு பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவற்றுக்குதீர்வைவழங்கமுடியாத இவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்கள் என்பதை நிரூபித்துள்ளனர்.

அதேவேளை டட்லி சிறிசேனவும் முற்று முழுதாக ஆளும்தரப்பின் ஆதரவுடன் அவரது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். நுவர்வோர் அதிகாரசபை அதிகாரிகளை அனுப்பி 230 ரூபாவுக்கு அரிசியைவிற்பனைசெய்யாதவர்களைகைது செய்கின்றனர். 230 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்வது டட்லி சிறிசேனவுக்கு நஷ்டமில்லை.

இந்த ஆளும்தரப்பு ஜனநாயக ரீதியில் செயற்படும் என்பதே பெரும்பாலானோரது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கள் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன. ஆளும்தரப்பின் பொய் மற்றும் ஏமாற்று வேலைகளால் மக்களின் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. அவற்றிலிருந்து மக்களை மீட்பதற்கான வேலைத்திட்டங்கள் எவையும் ஆளும்தரப்பிடம் இல்லை.

முன்னாள் சபாநாயகருக்கு தனது கலாநிதி பட்டம் உண்மையானது என்பதை இன்று நிரூபிக்க முடியாத நிலைமையே காணப்படுகிறது. இதனால் அவர் பதவி விலகினார். ஆனால் நீதி அமைச்சரின் பெயருக்கு முன்னாள் இடப்பட்ட கலாநிதி பட்டத்துக்கு தற்போது என்ன ஆனது? சபை முதல்வரது அலுவலகத்திலிருந்தே இந்தத் தகவல்கள் சபாநாயகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறெனில் போலியானதகவல்களைவழங்கியமைக்காக சபைமுதல்வரும் பதவி விலகவேண்டும் என்றார்.

## ஒவ்வொரு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேடகலந்துரையாடலின்போதேஅமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசு மட்டத்தில் அமுல்படுத்தப்படும் சகல திட்டங்களையும் முகாமைத்துவம் செய்யக்கூடிய திட்ட முகாமைத்துவப் பிரிவொன்றை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டு மக்களுக்கு உயர்தரமான மருந்து வழங்கும் கடமையை மருந்துகள் தொடர்பான பிரதான நான்கு நிறுவனங்களும் பொறுப்பேற்று செயற்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள வைத்தியசாலை குழுவைக் கலைத்துப் புதிய வைத்தியசாலைக் குழுவியை நியமிப்பது அவசியம். எதிர்வரும் 5 வருடங்களில் சகல வசதிகளுடன் கூடிய நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தை நிர்மாணிக்க ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார சேவைகளை அதிகரிக்க தற்போது செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சைப் பிரிவில் உள்ள நெரிசலை நீக்குவதற்கு, ஒவ்வொரு கிராமத்திற்கும் அருகில் ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவ எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆகையால் அடுத்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்க ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களுக்கு அவசியமானவளங்களைவழங்கஉடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குவதிலும் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

இந்நாட்டின் சுகாதார சேவையின் எதிர்கால செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் அதிகாரத்தின் விருப்பத்தின் பேரில் அல்லாமல் சுகாதார அமைச்சின் உறுதியான திட்டத்துக்கமையவே முன்னெடுக்கப்படவேண்டும். சுகாதார சேவையின்

தரமான மாற்றத்திற்கு ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்த முழு அதிகாரமும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்நாட்டில் ஒவ்வொரு துறையிலும் உள்ள பிரஜைகளை பலப்படுத்தி, ஊக்குவித்து சுமுகமான வாழ்க்கையை கையளிப்பதோடு, ஊழலற்றதலைமைத்துவத்தைவழங்குவதும், அரச சேவை குறித்த குற்றச்சாட்டுக்களை நீக்கி திறமையாக திட்டமிட்டு குழுவாக செயல்படுவதே புதிய ஆளும்தரப்பின் நோக்கமாகும் என்றார்.

# 14 வயது ஹொக்கி போட்டியில் மாத்தளை இந்து சம்பியன்

*(மஸாஹிம்)*

*ஸ்ரீ லங்கா பாடசாலை ஹொக்கி சம்மேளனம் 14 வயதிற்கு உட்பட்ட பாடசாலைஹொக்கிகுழுக்களிடையே நடத்திய ஹொக்கி போட்டியில் 20 புள்ளிகளைப்பெற்று மாத்தளை இந்து தேசியக் கல்லூரி அணி 'ரன்தரு' சாம்பியன் கிண்ணத்தைச் சுவிகரித்தது.*

*டிசெம்பர் 17,18,19,20 திகதிகளில் மாத்தளை எட்வட் ஹொக்கி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இலங்கை பாடசாலை ஹொக்கி அணிகளில் இருந்து 60 அணிகள் பங்குகொண்டிருந்தன. இறுதிச் சுற்றில் மாத்தளை இந்து தேசிய கல்லூரி, கொழும்பு இசுபத்தான கல்லூரி, கிராந்துரு கோட்டை கல்லூரி, கேகாலை வித்தியாலய அணி, கெகிராவ மத்திய மகா வித்தியாலய அணி, கண்டி பாததும்பர அணி என்ற அணிகள் இறுதி பேட்டியில் கலந்துகொண்டன.*

*முதலாவது ஆட்டத்தில் மாத்தளை இந்து கல்லூரி அணிக்கும் கொழும்பு இசுபத்தான கல்லூரி இடையில் இடம்பெற்றது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து போட்டி சமநிலையில் முடிந்தது. அதை தொடர்ந்து மாத்தளை இந்து கல்லூரி அணிக்கும் கிராந்துரு கோட்டை கல்லூரி அணிக்கும். இடையில் நடைப்பெற்ற போட்டியில் மாத்தளை இந்துக் கல்லூரி 4 கோல்கள் அடித்து வெற்ற பெற்றது. எதிரணி கோல்கள் எதுவும் போடவில்லை.*

*மாத்தளை இந்துக் கல்லூரி மற்றும் கேகாலை வித்தியாலய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்துக் கல்லூரி அணி 7 கோல்கள் அடித்து வெற்றி பெற்றது. எதிரணியை கோல்கள் எதுவும் அடிக்கவிடவில்லை. மாத்தளை இந்துக் கல்லூரி மற்றும் கெகிராவ மத்திய மகா வித்தியாலய அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் மாத்தளை இந்து கல்லூரி அணி, எதிரணியை கோல்கள் எதுவும் அடிக்கவிடமால் 5 கோல்கள் அடித்து வெற்றிப்பெற்றது.*

*இறுதியாக மாத்தளை இந்து கல்லூரி அணி கண்டி பாததும்பர அணியோடு மோதியதில் இந்து கல்லூரி அணி எதிரணியை துவம்சம் செய்து 3 கோல்களை அடித்து வெற்றிபெற்றது. எதிரணிக்கு கோல் எதுவும் கிடைக்கவில்லை. இப் போட்டியில் ஆகக் கூடுதலாக 20 கோல்களை (புள்ளி) பெற்று ரன்தரு சாம்பியன் கிண்ணத்தை சுவிகரித்து கொண்டது.*

*இவ்போட்டியின்விஷேட அதிதியாக மத்திய மாகாண விளையாட்டு துறை பணிப்பாளர் அசோக ஜயவர்தன கலந்துகொண்டார்.*

# மாத்தளை ஆதர வைத்தியசாலையில் அவசரச் சிகிச்சை தடைப்படும் அபாயம்

## வளாகம் அருகே குப்பைகளைக் கொட்டுவதால் அவலம்

*(மஸாஹிம்)*

*மாத்தளை ஆதர வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை முற்றாக மூடிவிடக் கூடிய நிலை உருவாகியுள்ளதாக மேற்படி வைத்தியசாலை பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் பிரசன்ன பெர்னான்டோ தெரிவிக்கிறார்.*

*மாத்தளை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு அபிவிருத்தி கூட்டம் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புத்த சாசன சமய மற்றும் கலாச்சார பிரதி அமைச்சருமான கமகெதர தியாநாயக்க தலைமையில் செவ்வாய்க்கிழமைஇடம்பெற்றபோது வைத்தியசாலைப் பணிப்பாளர் பிரசன்ன பெர்னான்டோ இந்த அபாய எச்சரிக்கையை விடுத்தார்.*

*தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மாத்தளை மாநகர சபையின் மூலம் அன்றாடம் சேகரிக்கப்படகூடிய குப்பைகூலங்கள் மேற்படி வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் காணியில் கொட்டப்படுவதால்அழுகிப்போகின்ற மேற்படி குப்பைகூலங்களிலிருந்துசகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் இந்த குப்பை மேட்டிலிருந்து பரவும் கொசு, ஈ மற்றும் நுளம்புகள் மேற்படி வைத்தியசாலைக்குள் வருவதால் வைத்தியசாலைப் பணிகளை தொடர முடியாதுள்ளதாகவும் மேற்படி வைத்தியசலையில் சத்திர சிக்ச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் மேற்படி கொசு மற்றும் ஈக்கள் நுளைவதால் எவ்வித சிகிச்சையையும் மேற்கொள்ள முடியாதுள்ளதோடு அவசர சிகிச்பப் பிரிவு பிரிவு உட்பட சகல விடுதிகளிலும் நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.*

*சத்திரசிகிச்சையின்போது ஈ; கொசு, நுளம்பு போன்ற நோய்காவிகளால் வேறு நோய்த் தொற்றுக்கள் ஏற்பட்டால் அது சிகிச்சையை மிகவும் சிக்கலானதாக மாற்றிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இது குறித்து வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் சிறப்பு வைத்தியர்கள் தன்னிடம் புகார் செய்துள்ளனர் என்றும் இந்த நிலை நீடிக்குமானால் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் உயிர்களுக்குகூட ஆபத்துகள் ஏற்படக்கூடிய ஆபாயம் இருக்கின்றது என்றும் இதனால் சத்திர சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மூடிவிடவேண்டிய நிலை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*இது சம்பந்தமாக பிரதி அமைச்சர் கமகெதர தியாநாயக்க தனது கவனத்தை செலுத்த வேண்டுமெனவும் இதற்கொரு சாதகமான பதிலை தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். பதிலளித்த பிரதி அமைச்சர், இந்தப் பெரும் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டியது சகலரின் பொதுக் கடமை எனவும் நோயாளிகளின் உயிர்களோடு விளையாட முடியாது எனவும் தெரிவித்தார்.*

*வைத்தியசாலையின் அருகில் குப்பைகளைக் கொட்டாது சூழல் மற்றும் சுகாதாரக் கேடுகள் ஏற்படாத வண்ணம் பொது மக்கள் வாழக்கூடிய குடியிருப்புகளுக்கு அல்லாத தனியான ஓர் இடத்தை இனங்கண்டு மேற்படிக் குப்பைகளைக் கொட்ட ஆவணம் செய்யும்படி பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மாத்தளை மாநாகர சபை அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்தார்.*



காலைக்கதிர் Kalaikkathir

# கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் இவ்வார கலைஞர் அறிமுகம் நேரலையில்

(சியாஜ்

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை தோறும் இரவு 8.30 மணிக்கு முகநூல் ஊடாக நேரலையாக இடம் பெறும் வெள்ளி மலர்கள் - கலைஞர் அறிமுகம் நிகழ்ச்சியில் இவ்வாரம் நுரைச்சோலை, சஞ்சிதாவத்தையைச் சேர்ந்த கவிச்சுடர் எச்.எம் சுகைப் கலந்து சிறப்பிக்க உள்ளார்

கற்பிட்டி வரலாற்றில் முதன் முறையாக வாராந்த முகநூல் நேரலை நிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வெள்ளி மலர்கள் எனும் கலைஞர் அறிமுகம் நிகழ்ச்சி சகல தரப்பினரையும் கவர்ந்துள்ளதுடன் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

மேற்படி வெள்ளி மலர்கள் எனும் கலைஞர் அறிமுகம் முகநூல் நேரலை நிகழ்ச்சியினை மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம் அஸ்கர் தொகுத்து வழங்குவதுடன் நேரலையினை கற்பிட்டியின் முகநூல் ஊடகவியலாளர் றிஸ்வி ஹுசைன் மேற்கொள்வதுடன் நெறிப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை தலைவர் எஸ்.எம் அருஸ், உப தலைவர் எம்.எம்.எம் நவ்ப், செயலாளர் எம்.எச்.எம் சியாஜ் மற்றும் நிர்வாக உறுப்பினர் எஸ் சுப்ரமணியம் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# பாலர் பாடசாலை கலை திறமைகள் வெளிப்பாட்டு நிகழ்வு

(சியாஜ் )

கற்பிட்டி ஜென்னத்துல் அஸாபீர் இஸ்லாமிய பாலர் பாடசாலையின் வருடாந்த கலை திறமைகள் வெளிப்பாட்டு நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஜே. நிஸ்மத்துல் பாஹீமா தலைமையில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ் எம் அருஸ், கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையின் அதிபர் எம் எம் எம் நவ்ப் ஆகியோருடன் கற்பிட்டி நகரில் உள்ள ஏனைய பாலர் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறார்களின் கலை, திறமைகள், ஆற்றல்கள் என பல்வேறு வகையிலும் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் நோக்கோடு சிறுவர்களின் ஆர்வத்தை தூண்டும் வண்ணம் கடந்த 12 வருடங்களாக கற்பிட்டி ஜென்னதுல் அஸாபீர் இஸ்லாமிய பாலர் பாடசாலை கலை, திறமைகளையும் வெளிப்பாட்டு நிகழ்வுகளையும் வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றன.

இந்நிகழ்வில்பங்குபற்றியசகலமாணவர்சிறார்களுக்கும் பதக்கம் , சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருள்கள் வழங்கி கௌரவித்தமையும் சிறப்பம்சமாகும். அத்தோடு இந்நிகழ்வு சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் என சகலருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் ஜே.நிஸ்மத்துல் பாஹீமா தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.




# அம்பாறை மாவட்டச் செயலகத்தில் சுனாமி நினைவு தினம் அனுஸ்டிப்பு

(ஹாரீஸ்)

26 டிசெம்பர் 2004 அன்று இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு அருகே ஆழ்கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த ஆழிப்பேரலைகள் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் பேரழிவையைஏற்படுத்தினஇச்சம்பவத்தில், கால் மில்லியன் 2 லட்சத்து மக்களின் உயிரை ஆழிப்பேரலை அள்ளிச் சென்றது.

ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் லட்சக்கணக்கானோர் உறவுகளையும் இழந்து திக்கற்றுப் போயினர். உயிர் இழப்புகளைத் தாண்டி பல சொத்துக்கள் ஒரே நாளில் தவிடுபொடி ஆகின. சுனாமி தாக்குதலில் மொத்தம் 1500 கோடிக்கும் மேல் பொருள் இழப்பு ஏற்பட்டதாகதகவல்கள்தெரிவிக்கப்பட்டன.

உலக நாடுகள் அத்தனையும் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டின. இந்த 20 ஆண்டு காலத்தில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்தாலும், இன்னும் ஏதோ ஓர்இடத்தில் சுனாமி பாதித்து சென்ற கோரத்தடம் அழியாத கோலங்களாக அப்படியே காட்சிப் பொருளாக இருக்கின்றன.

ஆழிப்பேரலை தாக்கி 20 ஆண்டு நினைவு நாளை நினைவு கூறும் வகையில் நேற்று (வியாழக்கிழமை )அம்பாறை மாவட்ட செயலகத்தில் உயிரிழந்த உறவுகளுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தேசிய கொடியும் அரைக்கம்பத்தில் பரக்க விடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir


# நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்று சால்புகள் நூல் வெளியீடு நிகழ்வு

(கஜனா)

சஞ்சீவி சிவகுமார் எழுதிய நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்றுச்சால்புகள் எனும் வரலாற்று நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது.

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் வெளியீடாக வெளிவரும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவர் க. ருத்திரமூர்த்தி தலைமை தாங்குகிறார்.

இவ்விழாவின் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தில் பணிப்பாளர் திரு சரவணமுத்து நவநீதன் அவர்கள் கலந்து கொள்கிறார். சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ்,பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் மற்றும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கவிக்கோ வெல்லவூர்க் கோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.




நற்பிட்டிமுனை ஒரு பழம் பெரும் கிராமம். மன்னராட்சிக் காலத்தில் திக்கதிபர் தலமாகவும் இராசாக்கள் கூடுமிடமாகவும் விளங்கிய இடம். ஒல்லாந்தர் போர்த்துக்கீசர் காலத்தைத் தவிர்த்து துல்லியமான ஆதாரங்கள் கொண்ட ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தினை மட்டும் நோக்கினாலேயே நற்பிட்டிமுனை வன்னிமை கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே கரவாகுப்பற்றின் வன்னிமைகளாக பதவி வகித்துள்ளனர் என்பதுடன் இவர்களின் காலப்பகுதி நூற்றிப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுற்றயல் கிராமங்கள் பலவற்றிலும் உள்ள தேசத்துக் கோயில்களில் தலைமைப் பொறுப்பை வன்னிமை வம்சத்தினரே வகித்து வருகின்றனர்.

நற்பிட்டிமுனை வன்னிமைகள் நற்பிட்டிமுனையில் மட்டுமன்றி மாற்றைய பற்றுகளுக்கும் தலைமைத்துவம் வழங்கி பெருமை சேர்த்தனர். இத்தகைய பெருமை கொண்ட கிராமத்தின் வரலாற்றுச் சிறப்புகளை இந்நூல் விவரிக்கின்றது.

நற்பிட்டிமுனைக் கிராமத்தின் சால்புகளை விவரிக்கும் இந்தநூல் பதினொரு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதல் மூன்று அத்தியாயங்களில் பூர்வீக இலங்கையில் திராவிட கலாசாரத்தின் வியாபகத்தையும் திராவிடக் குடியேற்றங்களையும் மட்டக்களப்பின் பண்டைய ஆட்சி பீடங்களையும் ஆராய்கிறது.

தொடர்ந்துவரும் அத்தியாயங்களில் நற்பிட்டிமுனையின் நிர்வாக ஒழுங்கமைப்பு வளர்ச்சி, நற்பிட்டிமுனையின் ஆட்சித் தள வரலாறு. கல்வி வரலாறு. ஆன்மீக வரலாறு, கலை இலக்கிய வரலாறு, நற்பிட்டிமுனையின் சமூக நிறுவனங்கள், நற்பிட்டிமுனையின் வழக்கிலிருந்த கதையாடல்களும் கதை கூறும்கிராமியவிளையாட்டுகளும்முதலான விடயங்களை பதிவு செய்கின்றது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற 34 ஆவது மத்தியஸ்தர் தின நிகழ்வுகள்




(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 34 ஆவது தேசிய மத்தியஸ்த தினநிகழ்வுசிறப்பானமுறையில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முதலில் பங்கேற்பாளர்களின் பதிவுகள் நடைபெற்றன. தொடர்ந்து சர்வமத பிரார்த்தனை வரவேற்பு உரை உள்ளிட்ட நிகழ்வுகள்நடைபெற்றதுடன்நீதிஅமைச்சின் மாவட்ட பயிற்சிஉத்தியோகத்தர்எம்.ஐ.எம். ஆஸாத் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

அத்துடன் மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் 25 வருடங்கள் மத்தியஸ்தராக கடமையாற்றிய மத்தியஸ்தர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

காத்தான்குடி பிரதேச மத்தியஸ்த சபையின் 3 மத்தியஸ்தர்கள் பாராட்டுப் பெற்றனர். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 பெண் மத்தியஸ்தர்கள் உள்ள மத்திய சபையாக காத்தான்குடி பிரதேச மத்தியஸ்த சபை இருப்பதை பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

இது தவிர பாடசாலை மட்டத்தில் மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் உட்பட சான்றிதழ்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான நிகழ்வில்மத்தியஸ்தசபையின்செயற்பாடுகள் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும் அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர் ஜீ. பிரணவன் உட்பட விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின் தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நன்றி உரையை நீதி அமைச்சின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.முஹமட் அஜுன் மேற்கொண்டார்.






# திருமலை மீடியா போரத்தினால் ஊடக விருதுகள் வழங்கி வைப்பு

(துஷாரா, அபு அலா, ஹலால்தீன்)

திருகோணமலை மீடியா போரத்தின் 5 ஆவது வருட பூர்த்தி விழாவும், ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையில் கிண்ணியா நகரசபை மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.



இவ்விழாவுக்கு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி பிரதம அதிதியாகவும், கிண்ணியா நகரசபை செயலாளர் முகம்மது அனீஸ், கிண்ணியாவை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எம்.வி.எம்.பௌண்டேஷன் உரிமையாளர் எம்.வி.எம்.பௌமி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது, கடந்த பல வருடங்களாக ஊடகத்துறைக்கு பெரும் பங்காற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலுக்கு சிறந்த ஊடகர் விருதுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும், தொடர்ச்சியாக செய்திகளை வழங்கிய மற்றும் பிரதேசத்தில் நடக்கின்ற செய்திகளை உடனுக்குடன் வழங்கி வந்த மூன்று ஊடகவியலாளர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு ஊடக விருது, சமூக தாரகை விருது போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டமையும்

# குருதிக்கொடை முகாம் மூதூரில்

(நௌபர்)

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மூதூர் இறங்குதுறை பொதுக்கட்டடமொன்றில் இரத்ததானமுகாம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்றது. மூதூர் தளவைத்தியசாலை இரத்தவங்கிப்பகுதியினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 20 வருட நினைவை முன்னிட்டு உதிரம் கொடுத்து உயிர் காப்போம் எனும் இரத்ததானமுகாம் நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த கெட்டி ஆராச்சி, மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் ஆகியோரும் இதில்கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.







# வவுனியா நகரத்தில் வாழும் ஆசிரியர்களுக்கு செல்வாக்கின் அடிப்படையில் இடமாற்றங்கள்

## அதற்கெதிராக கடும் நடவடிக்கை என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி

கூடுதலான அதிகாரிகள் வவுனியா நகரப்புறத்தில் இருக்கும் ஆசிரியர்களை காப்பாற்றி செல்வாக்கை பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா செட்டிகுளத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

செட்டிகுளம் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. நகர்புற பாடசாலைகள் பலவற்றில் மேலதிகமாக பல ஆசிரியர்கள் உள்ளனர். ஏன் நகர்புறப் பகுதியில் உள்ள ஆசிரியர்களை பின்தங்கிய பிரதேசத்திற்கு அனுப்ப முடியாமல் உள்ளது. செட்டிகுளம் பிரதேசத்தில் கடமையாற்றும் சில ஆசிரியர்கள் 8 வருடம் முடிந்தும் இடமாற்றம் வழங்கப்படாது உள்ளனர். ஆனால் நகர்புறப் பாடசாலைகளில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் நகர்புற பாடசாலைகளுக்கே சுழற்சி முறையில் இடமாற்றமாகி செல்கின்றனர்.

ஏன் அந்த ஆசிரியர்களை தூரப்பிரதேசங்களுக்கு அனுப்பக் கூடாது. தொடர்ச்சியாக தூரப் பிரதேசத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஏன் விமோசனம் கொடுக்கக் கூடாது. இங்கு கூடுதலான அதிகாரிகள் நகர் புறத்தில் இருக்கும் ஆசிரியர்களை காப்பாற்றி செல்வாக்கை பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர்.



எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்.

ஜனவரி 7 ஆம் திகதி வவுனியா தெற்கு வலயத்தின் உள்ளக இடமாற்றம் இடம்பெற இருக்கின்றது. அதில் இது தொடர்பில் கவனம் செலுத்தி சரியான முறையில் இடம்பெற வேணடும். செட்டிகுளம் கோட்டத்தில் பாரிய ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது. நகர்புறத்தில் தொடாந்தும் பணியாற்றும் ஆசிரியர்களைக் கொண்டு அந்த பற்றாக்குறையை நிரப்ப வேண்டும் எனக் கேட்கின்றேன். அத்துடன் இடமாற்றம் தொடர்பான விடயங்களையும் எம்மிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் பற்றக்குறை தொடர்பான விவரத்தை தர வேண்டும். புதிதாக ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுளளது. நாம் வடக்கு மாகாண ஆளுனருடனும், கல்வி அமைச்சின் செயலாளருடனும் பேசி இங்குள்ள ஆசிரியர் பறறாக்குறையை நிரப்ப முடியும் எனவும் தெரிவித்தார்.

100

# வாக்களித்த பொதுமக்களுக்கு அம்பாறையில் நன்றி பாராட்டு

(ஹமீட்)

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை ஜே.பி, கட்சியின் உயர்பீட உறுப்பினரும் மாவட்ட செயலாளரருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கடந்த பொதுத்தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கட்சியின் உயர்பீட உறுப்பினரும் நற்பிட்டிமுனை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான தௌபீக் தலைமையில் நற்பிட்டிமுனையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் நற்பிட்டிமுனை பிரதேச கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2024இல் வெளியிடப்பெற்றது